# அடியோர் யாம் தரும்

அடியோர் யாம் தரும் காணிக்கையை
அன்பாய் ஏற்பாய் ஆண்டவரே (2)

பாவியென்றெம்மை பாராமல்
பாவத்தின் தீர்வையை அடையாமல் (2)
பரிகாரம் என ஏற்றிடுவாய்
பலியாய் எமை நீ மாற்றிடுவாய்

அடியோர் யாம் தரும் காணிக்கையை
அன்பாய் ஏற்பாய் ஆண்டவரே

மேலொரு வாழ்வு உண்டு என்று - எம்
மேலெழும் துன்பத்தை மறக்கின்றோம் (2)
மேலும் துன்பங்கள் அடைந்தாலும்
மேன்மையின் பலியாய் தருகின்றோம்

அடியோர் யாம் தரும் காணிக்கையை
அன்பாய் ஏற்பாய் ஆண்டவரே

வாழ்வுக்கு ஒரு நாள் முடிவு உண்டு
விண் வாழ்வுக்கு எமக்கென்று எதுவுண்டு (2)
என் மனம் அறிந்ததன் பயன் என்னவோ
எல்லாம் அறிந்தவர் நீர் அல்லவோ

அடியோர் யாம் தரும் காணிக்கையை
அன்பாய் ஏற்பாய் ஆண்டவரே (2)